[illegible]
TIRUVANMIYUR, MADRAS-41.

7062
(8803)

உ

சிவமயம்.

7062



# வழிநடைச் சிந்து.

இஃது

யாழ்ப்பாணத்திற் பிரபலதர்மசீலராய் விளங்கிய

உயர் திரு. வை. வல்லிபுரம்

அவர்களால்,

பெரியகடை முற்சந்தியிற் கட்டுவித்திருக்கும்

கெங்கா சத்திரத்தின்பேரில்

காரைதீவிலிருந்து

வரும்வழிமார்க்கங்களைக் குறித்து

## நயினாதீவு வரகவி

உயர் திரு. வே. க. நாகமணிப்பிள்ளை

அவர்களால்.

1902–ம் ஆண்டிற்பாடப்பெற்றது.

நயினாதீவு.

வே. க. த. சுப்பிரமணியம் அவர்களால்

"ஸ்ரீ கணேச யந்திரசாலை" யிற் பதிப்பிக்கப் பெற்றது.

1934. விலை சதம் 10

உ
சிவமயம்.

# வழிநடைச் சிந்து.

காப்பு.

உலகமாக்கலுமோம்பலும் வீக்கலும்
மலமதாகமறைப்பதுமாள்வதுங்
குலவுமூலக்குடிலையதாயினேன்
சலசமாமலர்த்தாளிணையேத்துவாம்.

---

சத்திரத்தைப் பார்ப்போம் பெண்ணே எட்டிச்
சற்றே நடவாயென்கண்ணே
புத்திமிகும் மிட்டாசுக்கடை வல்லி
புரபுண்ணியவான் பொருளதனல்வண்ணே
கத்தும்பெரியகடையின் மூற்சந்தியிற்
கட்டியிருக்கும் கவின்செறியுமன்ன
சத்திரத்தைப் பார்ப்போம்பெண்ணே எட்டிச்
சற்றேநடவாயென்கண்ணே (சத்)

தேனொழுகுங்குழலாளே காரை
தீவிதுபாரொயிலாளே இப்போ
வேனிலதிகமதாலே யிதை
விட்டுநடவாயப்பாலே
மானேயிதோபார் அரிசிக்கடைகளும்
வந்தர்கோரங்கி நெற்கிட்டங்கிச் சாலையும்
பானைசட்டிவிற்கும் பண்டகசாலை
பலசரக்குக்கடை பாராயடியிதோ (சத்)

மாமயிலேயெட்டிவாராய் இவ்
வயலோரமெங்கும்நீபாராய் கரும்
பூமலியுங் கத்தரிமிளகாய் சிறு
பொற்பயறோடெள்ளுமழகாய்

தாமரிகின்ற வெண்காயமுழுந்து
தனித்தனிகாய்த்துச் சரிந்துகிடக்குது
தேமொழியே யிலைவபார்த்துச் சுணங்காது
சீக்கிரம்வா வெயிற்றேகம்பொறுக்காது (சத்)

புண்டரிகத்தியன்னுளே கால்
பொறுக்குமோகல்லின் மின்னுளே இந்த
வண்டிலுமிருதையின் வழியே காலே
வைத்துநடவாய் வேல்விழியே
கண்டேயதோபார் புன்னலைக்கடலிற் கவுண்மென்று
போட்டதோர் பாலத்தெரிவதை
வண்டார்குழலிது போனலப்பாலே
வழிகொஞ்சந்தானென்கிழியே நடந்துவா (சத்)

பூவெயிதின்முந்நாளே சனம்
போவது நீர்வழியாலே இதைக்
கோவாரறிந்திதிற் பலவாய்ப் பணம்
கோடிகோடியாகச்செலவாய்
மேவியேபாலம் பலவகுத்திந்த வெள்ளியிதைக்
கட்டாவிட்டால் மனிதர்கள்
சாவதிலேதடையில்லைச் சுரியிது தங்கமே
கால்வைக்கத்தான் முடியாதடி (சத்)

பெண்ணைக்குருத்துகள்பூட்டி வலே
பெண்களிழுக்கின்றபாட்டி இதில்
வண்ணக்கயற்கெண்டைறாலும் நல்ல
மாதர்பிடிப்பதற்கேலும்
கண்ணேயிதன்றிச் சிறுவர்கள் தூண்டிலாற்
கள்ளித்திருக்கை சுறுக்கெழுறேமுதற்
திண்ணமுடனே பிடிக்கின்றாரிந்தத்
தெருவுங்கழிந்ததென்தேனேயினி நட (சத்)

காணுமிவ்விடமென்மானே கொட்டைக்
    காடென்றுசொல்லுவர்தேனே இப்போ
தோணுதுடையாரின் மடமும் அதிற்
    துன்னியதோர் தண்ணீர்த்தடமும்
வேணவ்டலித்தொகைகளுமானது மெல்லியேபார்
    வெவ்வெயில் நேரமாகுது
பேணுமதிற்சென்று நீருண்டுபோகலாம்
    பெண்மயிலே காலைப்போர்த்தெட்டிவைபடி (சத்)

வேல்விழியே யன்னமிதுவே முன்
    விளம்பும்மடமிது பொதுவேமிகக்
காலைதொட்டேயென்கபோலம் கால்
    கடிக்குது தாடிதாம்பூலம்
சீலமிகுமன்னப்பேடைநடையுள்ளதேனே
    கிறிஸ்தவர்செய்துவைத்தேசிறு
பாலர்படிக்கின்றபள்ளிவிளங்குயர்பாம்
    வட்டுக்கோட்டைப்பகுதியைப்பாரடி (சத்)

மின்னேநீ பாராயிக்கூடம் பாலர்
    மேன்மாடமீதிலேபாடம் மிக
நந்நயத்தோடுமே கூறிப் பின்பு
    நாடோறுமேகியே தேறி
சன்னல்விளங்கிடுங்கோடதிலே சிலர்
    சக்கிடுத்தாரும் சொத்தாருங்கிளாக்குமாய்த்
துன்னிடுவார்சிலர் கூழுமில்லாமற்
    துணியுமில்லாமலே சோம்பித்திரிகுவார் (சத்)

பாராயிதோபனைக்கூடல் பள்ளர்
    பாளுறுங்கட்குடியாடல் மிகப்
பூராயமாகவேநாளும் இதிற்
    பொல்லாப்புகளெல்லாம் சூழும்

ரோரிளங்குயின்மாதே யிராவியிற்
திக்கிவ்விடத்தைத் தெரிந்துகொள்வாய்மேயும்
ஏராம் வழுக்கியாற்றுப்பாலமும் வந்தனம்
இன்னும்மைல் நான்குதானேயிருக்குது (சத்)

வேகத்தினல் நடைச்சோகம் கிற்கும்
வெய்யிலினுற் தண்ணீர்த்தாகம் மிக
வாகுற்றிருக்குமகோரம் கல்லுண்
டாயும்வருகுதிந்நேரம்
பாகுற்றிடுமொழியேயிம் மடந்தன்னிற்
பக்குவமாய்வைக்குங் மீதத்தண்ணீர்போலவே
நாவுக்கினிமைகிடையாது வாங்கிநீகன்றுய்க்குடி
பணம்நானே கொடுக்கிறேன் (சத்)

மாங்குயிலேமனம்போலே சாமான்
வாங்கிடுவாயினிமேலே என்
பாங்கியேவாய்தனிற்போட இலை
பாக்குப்புகையிலைகூட
வாங்கியேசுண்ணுகந்தானு மெடுத்துநீ
வாபோகலாம் நேரமானதுபோகுது
தேங்குமியாழ்ப்பாணந் தோற்றுதிப்போதுதான்
சீவனுனக்குவந்தாற்போற்றெரிகுது (சத்)

போக்கிரியந்திராசி கோளால் முன்னம்
பூதனுயிர்தன்னை வாளால்வெட்டும்
தூக்குமரக்காடுபாராய் அதோ
தோன்றுதோட்டு மடம்வாராய்
பாக்கியமேயிதோ சோனகர்கூட்டம்
பலவுமிருக்குந்தெருவிதிலேசிலர்
காக்கும்வேளாண்மைத் தொழின்மிகச்செய்து
கனவான்களாகயினமோடிருக்கிருர் (சத்)

நீளயிலைவகள்போகாது இதில்
நின்று சுணங்கலாகாது மாரி
லாளேயியந்திரசாலை யதில்
ஆயிரம்பேர்செய்வர்வேலை
தாள்குழலேமெத்தைவிட்டுவேற்பிள்ளையின்
றன்வீடிகுதுன் றனமெனவேசில
வாழைகள்பூ விட்டிருக்கக்கிராரமும்
வந்ததிந்தாரம்மனப்படியுண்ணலாம் (சந்)

தேனேயிவ்வீதியிலிருப்போர் சைவ
சிந்தனையிற்செல்லும் விருப்போர் ஊண்
ஆன அமுதுகளளிப்போர் சிவன்
ஆலயவீதியிற் களிப்போர்
ஆறுலறுசுவையை வகைசேருணவாக்க
யிவர்களையன் றிமற்றுருண்டு
தாறுகவேபசித்தா லிவர்வீட்டினிற்
சாப்பிடலாம்நெய்யுந்தான்விடுவார்மெய்யே (சந்)

நன்னுதலாய்சிவநீடித் தையல்
நாயகியாரொடுக்கூடித்தினம்
மன்னுமிவ்வாலயமேடி இதை
வந்தனைசெய்துதி பாடி
அன்னமேவாகதிரேசன தாலயம்
அங்கேவருவதையுந்தரிசித்து
பின்னேயிதோபார் முருகேசபிள்ளையின்
மிக்கதோர்சத்திரத்தின் சிறப்பெலாம் (சந்)

கூனற்பிறைநுதன்மாதே நாட்டுக்
கோட்டைச்செட்டிகளின்தோதே அவ
தானத்தோடேரெத்னவகையும் முத்துச்
சம்பா அரிசிநெல்வகையும்

மானத்தோடே விற்று வியாபாரமுஞ் செய்வர்
வட்டியென்றூற் பணம் சட்டெனஈகுவர்
ஏனத்தைக் கூறுதும் வாவாயிவ் வர்த்தக
யாழ்ப்பாண சங்கமிதையு நீ பாரடி (சந்)

தங்கமே வங்காளஞ் சேலை இதிற்
சரிகையினூற் கையில் வேலை மிகு
சங்கை சேர் பட்டினம்பட்டு யதிற்
றூனே யிடைக்கிடைபொட்டு
பங்கமில் காஸ்மீர கும்பகோண நாக
பட்டினஞ் சேலையும் பாளையங் கோட்டையிற்
தங்கியபட்டு மிருக்குப் பிடித்ததைத்
தான்வாங்குவாயடி தையலரேயிப்போ. (சந்)

கொர்ட்டடியிற் கறுத்தாராய்ப்புகழ்
கொண்டார் கடையிதுபாராய் இது
லட்டுமிட்டாய்பூந்திசேகு வடை
லாபமுள்ளசீனிப்பாகு
இட்டமுள்ளபலகாரவகையும்
இனமினமானகுளோவர்ச்சிமினியும்
தட்டுநிலைக்கண்ணுடி படந்தூங்கிய
சங்கைகொள் வல்லிபுரம்கடைபாரடி (சந்)

சேல்விழியேயிந்தக்கடைகள் தனிற்
சேரும்பலவித உடைகள் மன
மால்புரியுந்தனமடவாய் கன
வண்டிவருந்தள்ளிநடவாய்
பாலினியேயிதோ. வை. வ.
பதியோடமரும்புதிய மனையிதில்
வேலையனந்தம் விநோதமதாமடிமெல்லியரே
கண்விழித்திதைப் பாரடி (சந்)

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

7062



அம்பனையேகடையடியிற் பிள்ளை
யார்பதமேயுந்தன்முடியிற் கொண்டு
தம்பதமாகவேயடியிற் பணிந்
தாயெழுவாயொருநொடியில்
கொம்பனையே யிதோபாராய்சிலபலகொய்யுஞ்
சாயச்சோமன் விற்பவர்கூட்டத்தை
வம்புசேர்குழன்மாதே யிதற்கப்பால்
வாவாபலகைகடைநேராகக் காணலாம் (சந்)

மல்லிமிளகுவெண்காயம் உள்ளி
வண்டிற்பலிப்பெருங்காயம் சுக்கு
புல்லும்தரமேகோட்டம் ரதம்
பொற்புறு சீரகக்கூட்டம்
மெல்லாயிவைகளைவிற்றுமுற்சந்தி விளங்குங்
கடையைமெல்லெனவேபார்த்துச்
செல்லுமப்பால்முருகேசுவைத்திட்டதோர்
தேத்தண்ணீரின்கடை சீக்கிரம்பாரடி (சந்)

எள்ளொடுதேங்காயிந்நெய்யும் வைத்து
வியாபாரமெந்நாளுஞ்செய்யும் மிக
வள்ளலாம்வாணிகர்வீடு இந்த
மட்டில்எல்லாம்பார்த்துப்போடு
தெள்ளமுதேபார் சத்திரந்தன்னை
தென்புறமாயோர் கிணறொன்றிருப்பதை
உள்ளமேநாடியே பாதங்கழுவிப்பின்
உட்புகலாமெந்தன் கற்பகமேவாராய் (சந்)

இந்தக்கிணற்றைப்போல் வேறாய்க் கட்
டிடமெங்குமுண்டோநீகூறாய் மிக
மந்தரமாங்கிரிமலையிற் கல்லு
வண்டில்வண்டிலாகத்தொலையில்

முந்தியிருந்து கொணர்ந்து பின்னாலிதை
முற்றும் செலவோரையாயிரம்
சந்தமுறுந் தொகைவரையுஞ் சென்றிருக்குஞ்
சத்தியமாமித சத்தியமெண்ணாதே. (சத்)

தாமரைபோன் முகம்மாதே இதைச்
சற்றே நீ கேளாயிப்போதே. பாரில்
நாமிங்கு வந்தது தோணும் இதை
நன்றாய் நீ பார்த்திடவேணும்
காமப்பாங்கிளியே யிம்மடத்தினிற் கண்ணாடி
பூட்டிய யன்னல்களெத்தனை
நாமிப்படிப் பார்த்தன்ன உள்ளறை
யடுக்கடுக்காகத் தொடுத்திருக்கே கண்ணே. (சத்)

பூட்டுக்கதவுகள் கோடி நேராய்ப்
போட்டிருக்கே கனசோடி இதை
மேட்டு நீபாராய் கண்ணாலே அங்கே
வீடொன்றிருக்குது மேலே
நாட்டும் வடமேற்கு மூலையிலே யேணி
நன்றாயிருக்கடி நாமதிலேயேறி
மேட்டிமையாகவே பார்த்தன மிப்படி
வேலைகளெங்கேனும் வேறுண்டோ செப்படி. (சத்)

அன்புடனே யென்னையாளும் எந்தன்
ஆசைக்கண்ணாளனே கேளும். இதில்
இன்பமுடனே யெந்நாளுந் திரு
ஏகாந்த மெய்தியே வாழும்.
பின்பலகால நீடியே வாழ்கப்பெருமையுடன்
கட்டுவித்தவரும் வாழ்க
துன்பமில்லாமல் உலகமும் வாழுகச்
சொற்றமிழ் கற்றிடும் நற்றவரும்வாழ்க.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS